# உண்மையான விபர அட்டை

## குழந்தை ஆதரவு நோக்கங்களுக்கான வருமான வெளிப்படுத்துகை

பெற்றோர் இருவருக்கும் அவர்கள் திருமண பந்தத்திலிருந்து பிரிந்த அல்லது விவாகரத்து செய்த பின்னர் அவர்களின் குழந்தைகளுக்கு நிதி ரீதியில் உதவ வேண்டிய சட்டமுறையான ஒரு கடமை இருக்கின்றது.

*மத்திய அரசின் குழந்தை ஆதரவு பற்றிய வழிகாட்டல்கள்* [1] (மத்திய அரசின் குழந்தை ஆதரவு பற்றிய வழிகாட்டல்கள்) பிரகாரம், குழந்தைக்கு நியாயமான ஒரு உதவு தொகையை நிர்ணயித்துக்கொள்வதற்காக இற்றைப்படுத்திய முழுமையான சரியான வருமான விபரங்களை பெற்றோர் வழங்க வேண்டும்.

இந்த உண்மையான விபர அட்டை பின்வருவன பற்றிய பொதுவான தகவல்களை வழங்குகின்றது.

- வருமான விபரங்களை **யார்** வழங்க வேண்டும் மற்றும் அவர்கள் அத்தகைய விபரங்களை **எப்போது** வழங்க வேணடும்;
- **எத்தகைய** வருமான விபரங்களை வழங்க வேண்டும்; மற்றும்
- அத்தகைய தேவையான விபரங்கள் வழங்கப்படவில்லையெனில் **என்ன நிகழும்**.

[1] அநேகமாக மத்திய அரசின் குழந்தை ஆதரவு பற்றிய வழிகாட்டல்கள் போன்ற குழந்தை ஆதரவு தொடர்பான வழிகாட்டல்களையே (வித்தியாசமான ஒரு குழந்தை ஆதரவு அணுகுமுறையை பின்பற்றியுள்ள கியூபெக் நகரம் தவிர) சகல அனைத்து மாணிலங்களும் பிராந்தியங்களும் பின்பற்றியுள்ளன. ஆயினும், ஒரு சில வித்தியாசங்கள் இருக்கலாம். இந்த வழிகாட்டல்கள் தொடர்பான விபரங்களை http://www.justice.gc.ca/eng/fl-df/pt-tp/ என்ற இணையத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். ஒரு நபரின் சூழ்நிலை பற்றிய உண்மையான விபரங்களே அவருக்கு எத்தகைய வழிகாட்டல்கள் பொருந்தும் என்பதை நிர்ணயிக்கும்.

## வருமான விபரங்களை யார் வழங்க வேண்டும் மற்றும் அவர்கள் அத்தகைய விபரங்களை எப்போது வழங்க வேண்டும்?

இரண்டு விதமான வருமான வெளிப்படுத்துகைக் கடமைகள் இருக்கின்றன: ஆரம்ப கடமை மற்றும் நிகழ் அடிப்படையிலான கடமை (தொடரும்).

### *1. ஆரம்ப வெளிப்படுத்துகைக் கடமை*

ஆரம்ப குழந்தை உதவு தொகையை நிர்ணயிப்பதற்கு, மத்திய அரசின் குழந்தை ஆதரவு பற்றிய வழிகாட்டல்கள் பெற்றோர்களில் ஒருவரை அல்லது இருவரையும் கடந்த மூன்று வரி ஆண்டுகளுக்குரிய தமது இற்றைப்படுத்திய முழுமையான வருமான விபரங்களை வழங்குவதற்கு அவசியப்படுத்தும்.[2]

**பெற்றோர்கள் இருவரும்:**

- ஒரு தனியான அல்லது கூட்டுக் குழந்தைப் பாதுகாப்பு ஏற்பாடு இருக்கின்ற;
- விஷேட அல்லது அதிவிஷேட செலவுகள் ஏற்பாடு இருக்கின்ற;
- ஒரு தேவையற்ற துன்பக் கோரல் இருக்கின்ற;
- குழந்தை பெரும்பான்மை வயதுடையதாக அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையதாக இருக்கின்ற மற்றும் குழந்தை பெறும்பான்மை வயதுக்குக் கீழ்பட்ட வயதுடையதாயின் குழந்தை உதவு தொகை கணிப்பீடுசெய்யப்பட்டிருக்கின்ற;
- உதவு தொகையை வழங்கும் பெற்றோர் ஆண்டொன்றுக்கு $150,000 தொகையை விடவும் அதிகம் சம்பாதிக்கின்ற;

---

[2] மத்திய அரசின் குழந்தை ஆதரவு பற்றிய வழிகாட்டல்கள் பொருந்தவில்லையெனில், மேலதிக தகவல்களுக்கு, தயவுசெய்து பொருத்தமான மாணில அல்லது பிராந்திய வழிகாட்டல்களின் கீழுள்ள வருமான வெளிப்படுத்துகைக்கான தேவைப்பாடு பற்றிய விபரங்களைப் பார்க்கவும்.

- இரண்டு தரப்புகளில் ஒரு தரப்பு தமது துணைவரின் அல்லது பெற்றோரின் குழந்தைக்கு ஒரு பெற்றோராக (உதாரணமாக, மறுதாரப் பெற்றோர்) இருந்து வருகின்ற சந்தர்ப்பத்தில் தத்தமது வருமான விபரங்களை வழங்க வேண்டும்.

இந்த சூழ்நிலைகளில் எதுவும் பொருந்தாத சந்தர்ப்பத்தில், குழந்தை உதவு தொகையை செலுத்தும் பெற்றோர் (உதாரணமாக, பெற்றோர்களில் ஒருவருக்கு தனியாக குழந்தையைப் பாதுகாத்துப் பராமரிக்க வேண்டுமாயின்) மாத்திரம் தத்தமது வருமான விபரங்களை வழங்குவதற்குத் தேவைப்படுத்தப்படுவார்.

### *2. ஒரு குழந்தை உதவு தொகையை வழங்குமாறான உத்தரவு பிறப்பிக்கப்பட்ட அல்லது அதற்கான ஒரு உடன்பாடு எட்டப்பட்ட பின்னர் தொடர்ச்சியாக விபரங்களை வெளிப்படுத்தும் கடமை*

ஒரு குழந்தை உதவு தொகையை வழங்குமாறான ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட அல்லது அதற்கான ஒரு உடன்பாடு எட்டப்பட்ட பின்னரும், சரியான வருமான விபரங்களின் அடிப்படையில் குழந்தைக்கு நியாயமான ஒரு உதவு தொகை கிடைக்கின்றதா என்பதை நிச்சயப்படுத்திற்கொள்வதற்கு, பெற்றோர் தொடர்ச்சியாக தத்தமது வருமான விபரங்களை வழங்குவது கடமையாகும். இந்த சட்டமுறையான கடமை சட்டத்திலிருந்தும், நீதிமன்றத் தீர்ப்புகளிலிருந்தும், மற்றும்/அல்லது நிருவாகத் துறை சேவைகளிலிருந்தும் (உதாரணமாக, மீள்கணிப்பீட்டு சேவை[3]) எழுகின்றது.

---

[3] மீள்கணிப்பீட்டு சேவைகள் என்பது இற்றைப்படுத்திய சரியான வருமான விபரங்களின் அடிப்படையில் குழந்தை உதவு தொகையை சரிசெய்துகொள்ளக்கூடிய மாணில அல்லது பிராந்திய சேவைகளாகும். மீள்கணிப்பீட்டு சேவைகளை எங்கு பெற்றுக்கொள்ளலாம் மற்றும் யார் அத்தகைய சேவைகளிலிருந்து பயன்பெறலாம் என்பது பற்றிய விபரங்கள் கனடாவின் நீதி இலாக்காவினது Inventory of Government-Based Family Justice Services (அரசாங்க அடிப்படையிலான குடும்ப நீதி சேவைகள் பற்றிய விபரங்கள்) என்ற தகவல் தளத்தில் காணப்படுகின்றன.

- **<u>மத்திய அரசின் குழந்தை ஆதரவு பற்றிய வழிகாட்டல்கள்</u>**: குழந்தை உதவு தொகையை நிர்ணயிப்பதற்காக தத்தமது வருமான விபரங்களை வழங்க வேண்டுமென்றிருக்கும் பெற்றோர்கள் மற்றைய பெற்றோரிடமிருந்து எழுத்திலான ஒரு கோரிக்கை அவர்களுக்கு கிடைத்தால், ஒரு வருடத்தில் ஒரு தடவையேனும் இற்றைப்படுத்திய சரியான வருமான விபரங்களை வழங்க வேண்டும் என **மத்திய அரசின் குழந்தை ஆதரவு** பற்றிய வழிகாட்டல்கள் கூறுகின்றன. இது சரியான இற்றைப்படுத்திய வருமான விபரங்களுக்கான கோரிக்கையை அனுப்பும் பெற்றோருக்கு அத்தகைய வருமான விபரங்களுக்கான உரிமை இருக்கின்றது என்பதையும் மற்றைய பெற்றோர் அத்தகைய விபரங்களை வழங்க வேண்டும் என்பதையும் கருதும்.

- **<u>வருமான மாற்றங்கள்</u>**: பெற்றோர் தமது மிகவும் அண்மித்த நடைமுறை வருமான விபரங்களின் அடிப்படையில் குழந்தை உதவு தொகையை செலுத்த வேண்டும் என கனடாவின் மீயுயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.[4] ஆகையால், பெற்றோர்கள் தத்தமது வருமான மாற்றங்கள் பற்றி மற்றைய பெற்றோருக்கு அறிவிக்க வேண்டும்.

- **<u>உத்தரவு அல்லது உடன்பாடு</u>**: ஒரு குழந்தை உதவு தொகை தொடர்பான உத்தரவானது அல்லது உடன்பாடானது ஒரு பெற்றோரை மற்றைய பெற்றோருக்கு குறித்த நேரங்களில் அல்லது குறித்த சூழ்நிலைகளில் வருமான விபரங்களை வழங்குவதற்குத் தேவைப்படுத்தலாம்.

- **<u>மீள்கணிப்பீட்டு சேவை</u>**: தமது குழந்தைக்காக பிறப்பிக்கப்பட்ட உதவு தொகை உத்தரவானது அல்லது அதற்காக எட்டப்பட்ட உடன்பாடானது 'மீள்கணிப்பீட்டு சேவை' மூலம் பதிவுசெய்யப்பட்டிருக்குமாயின், பெற்றோர்களை தத்தமது வருமான விபரங்களை வழங்குவதற்குமாறும் தேவைப்படுத்தலாம்.

---

[4] *D.B.S.* v. *S.R.G.; L.J.W.* v. *T.A.R.; Henry* v. *Henry; Hiemstra* v. *Hiemstra, [2006] 2 S.C.R. 231, 2006 SCC 37.*

## பெற்றோர்கள் எத்தகைய வருமான விபரங்களை வழங்க வேண்டும்?

இற்றைப்படுத்திய முழுமையான சரியான விபரங்கள் **கட்டாயம்** வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய விபரங்களில் பின்வரும் விடயங்கள் உள்ளடங்கியிருத்தலும் வேண்டும்:

- மிக அண்மித்த மூன்று வரி ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டிற்குமான வருமான வரிப் புறழ்வுகள்; மற்றும்
- அந்த மிக அண்மித்த மூன்று வரி ஆண்டுகளிலும் ஒவ்வொரு ஆண்டிற்கும் கனடா வருமான முகவர்நிலையத்திலிருந்து கிடைத்த வரி மதிப்பு மற்றும் மீள்வரி மதிப்பு அறிவித்தல்கள்.

ஒரு பெற்றோர் பின்வருவன போன்ற ஏனைய வருமான விபரங்களையும் பகிர்ந்துகொள்வதற்கு **அவசியப்படுத்தப்படலாம்**:

- மிக அண்மித்த கால சம்பாத்தியங்கள் அல்லது சம்பளப் பட்டியல் பற்றிய கூற்று அல்லது தனது சம்பளத்தை அல்லது வேதனங்களை விவரிக்கின்ற தனது தொழில்தருநரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கடிதம்;
- பெற்றோர் சுயதொழில் செய்பவராக அல்லது ஒரு கூட்டுத்தாபனத்தை நிருவகிப்பவராக இருந்தால், நிதிக் கூற்றுக்கள்;
- தொழில் காப்புறுதி, தொழிலாளர் நஷ்டஈடு, ஊனமுற்றோர் கொடுப்பனவுகள், மற்றும் சமூக அல்லது பொது உதவிகள் முதலியவற்றின் அடிப்படையில் கிடைத்த வருமானம் பற்றிய விபரங்கள்.

## பெற்றோர் உரிய விபரங்களை வழங்குவதற்குத் தவறினால் என்ன நிகழும்?

சட்டத்தின் பிரகாரம், பெற்றோர்கள் தேவையான விபரங்களை வழங்குமாறு தேவைப்படுத்தப்படுகின்ற நேரத்தில் அவர்கள் தமது இற்றைப்படுத்திய முழுமையான வருமான விபரங்களை வழங்க

வேண்டும். பெற்றோர் குறித்த கடமையை மதிக்காமல் உதாசீனப்படுத்துவாராயின், நீதிமன்றம், உதாரணமாக:

- வருமானம் பற்றிய விபரங்கள் வழங்கப்படுதல் வேண்டுமெனும் உத்தரவை (வருமானத்தை வெளிப்படுத்துமாறான உத்தரவு);
- பெற்றோரின் வருமானம் குழந்தை உதவு தொகை நோக்கங்களுக்கான குறிப்பிட்டவொரு தொகையாகவிருந்தால், அந்த வருமானத்தின் (சுமத்து வருமானம்) அடிப்படையில் ஒரு உத்தரவை;
- வருமானத்தில் மாற்றம் நிகழும் போது சகல வழிகளிலும் குழந்தைக்கு உரித்தான குழந்தை உதவு தொகையை செலுத்துமாறான உத்தரவை (முந்துரிமை உத்தரவு) பிறப்பிக்கலாம்;
- ஒரு பெற்றோரை மற்றைய பெற்றோரின் சட்டமுறையான செலவுகளை செலுத்துமாறு தேவைப்படுத்தலாம்;
- தண்டப் பணங்களை மற்றும் / அல்லது மறியல் தண்டனையை விதிக்கக்கூடிய நியாயாதிக்கமுடைய நீதிமன்றத்தில், பெற்றோர் குற்றவாளியாகக் கணிக்கப்படலாம்.

மத்திய அரசின் குழந்தை ஆதரவு பற்றிய வழிகாட்டல்கள்: படிப்படியான வெளியீட்டு விபரங்கள் கனடாவின் நீதி இலாக்காவினது குடும்ப சட்டங்கள் எனும் http://www.justice.gc.ca/eng/rp-pr/fl-lf/child-enfant/guide/index.html விபரத் தளத்தில் காணப்படுகின்றன. இந்தத் தளம் குழந்தை ஆதரவு தொடர்பான பிரச்சினைகள் பற்றிய மேலதிகமான விபரங்களையும் தரும்.

***கனடாவின் நீதி சேவை முதியோர்களுக்கான விவாகரத்தும் பிரிவும் மற்றும் குழந்தைகளுக்கான ஆதரவும் பற்றிய விபரங்களை இலவசமாக வழங்கி உதவும் என்பதை நீங்கள் அறிந்திருந்தீர்களா? இந்தக் குறுகிய வீடியோவின் அல்லது எமது தளத்தில் பிரவேசிப்பதன் மூலம் மேலதிக விபரங்களை அறிந்துகொள்ளலாம்.***

***Canada.ca/family-law***

**மறுத்துரைப்பு:** இது ஒரு சட்ட நூலல்ல. இது சட்ட ஆலோசனையை வழங்குவதுமில்லை. குடும்ப சட்டம் சிக்கலானது என்பதால், வழமையாக தனியாட்கள் தமது சூழ்நிலையை தெரியப்படுத்தி, ஒரு குடும்ப சட்ட வல்லுநரிடமிருந்து சட்ட ஆலோசனையை பெற்றுக்கொள்வது மிகவும் சிறந்தது. இந்த சட்ட நிபுணர்கள் குழந்தைகளின் உரிமைகளையும் பெற்றோர்களின் கடமைகளையும் பற்றிய சட்ட ஆலோசனைகளை வழங்கக்கூடிய சிறந்த ஆற்றலுடையவர்கள். அநேகமான மாணில மற்றும் பிராந்திய சட்ட வல்லுநர் சங்கங்கள் Lawyer Referral Services ஐ வழங்குகின்றன. சில சட்ட வல்லுநர்கள் கட்டணத்திற்காக அல்லது குறைந்தவொரு கட்டணத்தில் ஆரம்ப ஆலோசனையை வழங்கலாம், ஆகையால் தனியாட்கள் தமது குறித்த சூழ்நிலையின் ஒரு சில அம்சங்களை தெரியப்படுத்தி ஒரு சட்ட வல்லுநரிடம் சொற்ப நேரம் ஆலோசனையைப் பெறுவதற்குத் தீர்மானிக்கலாம்.